முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இடைக்காடர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.02.2019, சனிக்கிழமை

1. **தவயோகம் தன்னை மக்களுக்காக**
**தருமயோகமாக மாற்றி நன்கு**
**அவதாரம் புரிந்து கலியுகத்தில்**
**ஆறுமுக அரங்கனாக வந்த ஞானியே**

2. ஞானியே உன் வழி மக்களெல்லாம்
ஞானம் பயில தேறுவரெனக் கூறி
இனிமைபட நித்ய பிரசன்ன ஆசி
இயம்பிடுவேன் **விளம்பி சால் திங்கள்**

3. **திங்களிலே சதுர்திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 4ம் நாள் 16.02.2019, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு இடைக்காடர் யானும்**
ஓங்கார ஓசைபட நல்லுலகமாக
உயர்மாற்றம் காண உரைப்பேன்

4. உரைக்கவே சன்மார்க்க நெறி
உலக மக்கள் பின்பற்றி வர
நிறைவான தான தருமமுடன்
நீதிமான் ஞானவான் அரங்கன் தலைமை

5. தலைமை ஏற்று வருதலுற
தட்டாது முழுமை சரணடைவை
பிழைபடா சீடர்களாகி தொடர
பேருலகே ஞானவான்கள் நிறைந்த

6. நிறைந்த ஞான உலகமாகி
நிலவுலகே பாதுகாப்பு பெறும்
குறைவிலா இயற்கை வளம் பெருகி
குவலயமே அமைதிமிக்க பூமியாகி

7. ஆகியே ஞானிகள் துணைபட
ஆனந்தமான ஞான ஆட்சியாக
அகிலம் எங்கும் மலரும் வளரும்
அரங்க ஞானியை போல உலகில்

8. உலகில் மக்களுடன் கலந்த
உயர் ஞானியை காண இயலாது
கோலமதாய் அன்னதனால் மக்களே
குருவே என வணங்கி வந்தால் போதும்

9. போதுமான மனபலமும் திடமும்
புண்ணியமான செயலும் வளமும்
பூதலமெங்கும் பரவி இனிதே
பெருமைபட அரங்கன் கொள்கை வழி

10. வழிதனில் சத்திய ஞான உலகம்
வல்லமைபட அரங்கன் மூலம்
அழியாமையுடன் ஆறுமுகனார்
அணுகும் யாவருக்கும் பங்களித்து

11. பங்களித்து உருவாக்கி வருக
பாருலகோர் ஏழாம் படை வீட்டில்
பங்கு பெறும் வண்ணம் சேவை
பணிந்து செய்து வந்தாலே ஞானியாவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் இடைக்காடர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஞானம் பெறுவதற்காக செய்யப்படுகின்ற தவயோகத்தினை கடினமான யோக ஞான பயிற்சிகளை எல்லாம் எளிமையாக மக்கள் கடைப்பிடித்து கடைத்தேறிட வேண்டும் என்ற மாாபெரும் தாயன்பினால் மக்கள்பால் கருணை கொண்டு ஜீவதயவே ஞானவீட்டின் திறவு கோல் எனும் ரகசியத்தை கூறி தருமம் செய்து ஜீவதயவை பெருக்கினாலே யோகஞான பலனை அடையலாம் என வழிவகை செய்து கடினமான தவயோகத்தை மக்களுக்காக தருமயோகமாக மாற்றித் தந்து சாமானியர்களையும் ஞானிகளாக ஆக்கிடவே கலியுகம் மாற்றி ஞானயுகம் படைக்கவே எல்லையில்லா ஆற்றல் மிகக் கொண்டு முருகப்பெருமானின் அவதாரமாக அவதரித்து கலியுகத்தினில் ஆறுமுக அரங்கமகானாக வந்த முருகப்பெருமானே மகா ஞானியே உமது தூயநெறிக் கொள்கைகளை மக்களெல்லாம் பின்பற்றி நடந்திட்டால் ஞானம் பயின்றால் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் என்றே அரங்கமகானே உமது அற்புதத்தை உலகமெலாம் அறியக் கூறியே இவ்வுலகம் அரங்கா உம்மால் முருகப்பெருமானின் ஓங்கார நாமங்கள் உலகமெலாம் ஒலித்து உலகமே அருள் உலகமாக ஆகி உயர்வான ஞானயுகமாக யுகமாற்றம் அடைந்திடவே இடைக்காடர் யானும் **விளம்பி வருடம் மாசி மாதம் 4ம் நாள் 16.02.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே உரைக்கின்றேன்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உரைக்கும் தூய சன்மார்க்க நெறியினை உலக மக்கள் ஏற்றுக் கொண்டு பின்பற்றி வருவதுடன் தாராளமாய் தானதருமங்களை செய்வதுடன் நீதியைக் காக்கும் நீதிமான் முழுமை ஞானம் பெற்ற மகா ஞானி ஞானவான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை ஏற்று பின்பற்றி வர, தவறாமல் அரங்கன் வார்த்தைகளை தட்டாமல் ஏற்றுக் கொண்டு அரங்கன் திருவடிகளே கதியென முழுமையான சரணாகதியை அடைந்து பிழையேதும் செய்திடாத நன்மக்களாய் அரங்கன் விரும்பும் சீடர்களாக ஆகி அரங்கனை பின்தொடர இந்த உலகமே ஞானவான்கள் மிகுந்த ஞானஉலகமாக ஆகி உலகமே ஞானிகளின் அருள் பாதுகாப்பை முழுமையாக பெற்றிடும். உலகினில் இயற்கை சீற்றங்கள் தணிந்து இயற்கை வளம்மிக்க பூமியாகி அமைதியும் சந்தோஷமும்மிக்க நல் பூமியாகி

ஞானிகளின் துணையுடன் ஆனந்தமயமான ஞானஆட்சி உலகமெலாம் பரவி மலர்ந்து வளர்ச்சியடையும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைப் போல மக்களுடன் மக்களோடு மக்களாக எளிமையாக கலந்து அன்பு செய்யும் எளிமை ஞானியை உயர்ஞானம் பெற்ற உயர் ஞானியை உலகினில் காண இயலாது. உலகமும் இத்தகைய எளிய மகா ஞானியை கண்டதும் இல்லை, இனி காணப் போவதும் இல்லை.

அரங்கன் கருணையே வடிவானவன் அரங்கமகாதேசிகரே எம் குருவே, என மனம் உருகி வணங்கி வந்தாலே போதும், வணங்கினோர்க்கு மனோபலமும் மனோதிடமும் பெருகி தர்மத்தில் நாட்டம் உண்டாகி புண்ணியச் செயல்கள் பெருகி வளமும் இவ்வுலகமெலாம் பரவி உலகம் நல்லுலகமாக ஆகிடும்.

பெருமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகள் மூலமாக இவ்வுலகினில் சத்திய ஞானஉலகம் உண்டாகும். ஆறுமுக அரங்கன் மூலம் அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு மார்க்கத்தின் மூலமாக முருகப்பெருமானை மனம் உருகி அணுகுகின்ற யாவருக்கும் சத்திய ஞான உலகினில் பங்களித்து இவ்வுலகை சத்திய ஞான உலகமாக உருவாக்கி வருகின்றார் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார்.

ஆதலினாலே உலக மக்களே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினிலே அரங்கமகா தேசிகனாரின் ஞானபீடத்திலே நடக்கும் தானதருமப் பணிகளிலே பங்கு பெறுகின்ற வகையிலே தொண்டுகளையும், பொருளுதவிகளையும் பயபக்தியுடன் பணிந்து செய்து வந்தாலே போதும், அவர்களெல்லாம் அரங்கனின் கருணையால், அன்பால், தயவால், அருளால் ஞானியாக ஆகிடுவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் இடைக்காடர்.

—சுபம்—